# ஆஸ்டின் எழுப்பிய வினாவும் ஆதவ் அர்ஜூனாவின் 'அற்புத சுவிசேஷமும்!' 'தினத்தந்தி'யின் ஆச்சரியம்!!

'உப்பே சாரமற்றுப் போனால் உப்புக்குச் சாரமேற்றுவார் யார்?'- என்பது பைபிள் மொழி. விஜய் ஆட்சி ஆட்சித்திறமற்று சாரமற்றுக் கிடக்கிறது. சாரமேற்ற முயன்றாலோ தேரான் தெளிவாய் அரசியலில் மழலை மொழிப் பேசுகிறது. முதல் கூட்டத் தொடரிலேயே பெரும்பாலான அமைச்சர்கள் வரவில்லை. முதல்வர் இருந்தும் அவர் சம்பந்தப்பட்ட கேள்விக்களுக்கு அவரால் பதில் அளிக்க முடியவில்லை.

தேர்தல் சூறைக்காற்று சரிபாதி தமிழ்நாட்டைப் புழுதி மேடாக்கியது. எங்கெங்கோ பறந்து கொண்டு இருந்தவைகோபுரகலசத்தில்ஒட்டிக்கொண்டுவிட்டன. இன்னொருசூறைஅடிக்கிறபோது ஒட்டிக் கொண்டவை புழுதி மேட்டிற்கு வந்துவிடும். ஆயிரம் அடைக்கலான் குஞ்சிகளைவிட ஒரு குருவி விசேஷமானது என்று கூட நினைக்க முடியவில்லை. 'இங்குபேட்டர்' குழந்தையை போஷாக்கு ஆக் கலாம் என்று பார்த்தால் சபையிலே கோஷங்கள் அதிகமாகின்றன.

கடந்த ஜூன் 19 ஆம் தேதி சட்டமன்றத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நாளேடுகளில் வந்துள்ள படி கீழே தருகின்றோம், படித்துப்பாருங்கள்.

**ஆஸ்டின்**(தி.மு.க.-நாகர்கோவில்) தமிழகத்தில் சிறு குழந்தைகள், பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டாலும் சரி, வேறு எந்த அசம்பாவிதம் நடந்தாலும் சரி; வாய் திறந்து எதையும் பேசப் போவதில்லை என முதல்வர் இருக்கிறார்.

**அமைச்சர் ஆதவ் அர்ஜூனா:** தவறானதகவலை உறுப்பினர் தெரிவிக்கிறார். தி.மு.க. ஆட்சியின் போது தூத்துக்குடியில் 4 மாதங்களுக்கு முன்பாக பள்ளி மாணவி ஒருவர் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக புகாரளித்து 36 மணி நேரமாகியும் அதுகுறித்து காவல் துறை வழக்குப் பதிவு செய்யவில்லை.

அப்போதைய முதல்வரோ, அமைச்சர்களோ, எல். எல்.ஏக்களோ அதுகுறித்துப் பேசவில்லை.

ஆனால், தற்போதைய முதல்வரோ 24 மணி நேரமும் மக்களுக்கு பணியாற்றுகிறார். அவருக்கு என்ன பேச வேண்டும்; எப்போது பேச வேண்டும் என்பது நன்றாகத் தெரியும்.

எனவே;தொடர்ந்து எங்கள் உணர்வுகளைத் தூண்டும் வகையிலான வார்த்தைகளைப் பேசுவதை தி.மு.கவினர் தவிர்க்க வேண்டும்.

முதல்வர் ஜோசப் விஜய் கொளத்தூரில் என்ன பேசினார் என்பது உங்களுக்கு தெரியும். அதன் பின்னர் தேர்தல் முடிவுகள் என்னவானது என்பதும்



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

உங்களுக்குத் தெரியும் என்றார். அப்போது குறுக்கிட்ட தி.மு.க. உறுப்பினர்கள், இந்தத் தருணத்தில் கொளத்தூர் தொடர்பாக எதற்குப் பேச வேண்டும் எனக் கூறி கூச்சலிட்டனர். அதற்கு எதிராக ஆளுங்கட்சியினரும் கூச்சல் எழுப்பினர்.

இதனால் அவையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. இரு தரப்பையும் பேரவைத் தலைவர் சமாதானப்படுத்தி அமர வைத்தார்.

(தினமணி 19.06.2026)

ஆஸ்டின் எழுப்பிய வினாவுக்கு உரிய பதிலை ஆதவ் அர்ஜூனா தெரிவிக்கவில்லை. கொளத்தூர் சம்பந்தமாகவா ஆஸ்டின் வினா தொடுத்தார். இந்த வினாவுக்கு முதல்வர் பதில் அளிக்கவில்லை. முதல்வர் மௌனமாக இருந்தார். ஆதவ் கொளத்தூர் முடிவைப் பற்றி பொருத்தமில்லாமல் பதில் கூறுகிறார். இந்த ஆட்சியா 'புரட்சியாக' வந்து இருக்கிறது. முதல்வர் விஜய்யின் மௌனத்தைப் பார்த்து நாம் மட்டுமா ஆச்சரியம் அடைந்தோம். தினத்தந்தியும் ஆச்சரியம் அடைந்து இருக்கிறது. அதைச் செய்தியாக வெளியிட்டு இருக்கிறது.

அதனைத் தருகிறோம். படித்துப்பாருங்கள்.

**அனைத்து விவாதத்தையும் கவனித்தபடி அமைதி காத்த முதல்– அமைச்சர் விஜய் சட்டசபையில் 5 மணி நேரம் அமர்ந்திருந்தார்**

சென்னை, 20-

தமிழக சட்டசபையில் ஆளும் கட்சி தரப்புக்கும், எதிர்க்கட்சி தரப்புக்கும் காரசார மோதல்கள் வெடிக்கும் போது, முத்தாய்ப்பாக முதல்-அமைச்சர் பேசி சில விவரங்களை பதிவு செய்வது வழக்கம். அதன் பிறகு அந்த பிரச்சினை பெரிதாக பேசப்படாது. முதல்-அமைச்சரே பதிலளித்துவிட்டார். இனி அடுத்த பிரச்சினைக்கு செல்லுங்கள் என்று விவாதிக்கும் எம்.எல்.ஏ.க்கு சபாநாயகர் அறிவுரை வழங்குவது வழக்கம்.

ஆனால், தமிழகத்தில் புதிதாக அரசு அமைத்துள்ள த.வெ.க.வுக்கு சட்டமன்றம் புதிது. எனவே நேற்று நடந்த விவாதத்தில் அமைச்சர்கள் பலர் பங்கேற்கவில்லை. அவை முன்னவர் என்ற முறையில் அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர்கள் ஆதவ் அர்ஜூனா, அருண் ராஜ் உள்ளிட்ட ஒரு சிலர் மட்டும் எம்.எல்.ஏ.க்களின் விவாதத்தின் போது குறுக்கிட்டு பதிலளித்தனர்.

**தி.மு.க. தரப்பில் ஆஸ்டின் சில குற்றச் சம்பவங்களை குறிப்பிட்டு பேசியபோதும் அதற்குகாவல்துறையின்சிலபுள்ளிவிவரங்களை அமைச்சர் ராஜ்மோகன்தான் முன்வைத்தாரே தவிர, எம்.எல்.ஏ.க்கள் எதிர்பார்த்தபடி முதல்– அமைச்சர் விஜய் பதிலளிக்கவில்லை. இது சற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.**

என்றாலும், முதல்-அமைச்சர் விஜய் ஒவ்வொருவரின் விவாதத்தையும், அதற்கு அளிக்கப்படும் பதில்களையும் மிக உன்னிப்பாக கவனித்தபடி இருந்தார். விவாதங்களில், அனுபவம் வாய்ந்த தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளின் கை ஓங்கி இருந்தால் கூட, அமைச்சர்களின் பதில்களும் குறைவுபட்டதாக இருக்கவில்லை சட்டசபைக்கு முதல்-அமைச்சர் விஜய் நேற்று காலை 9.25 மணியளவில் வருகை தந்தார். மேகதாது தொடர்பான அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்து, நிறைவேற்றியதும், அடுத்ததாக எடுக்கப்பட்ட கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான எம்.எல்.ஏ.க்களின் முழுவிவாதத்திலும் பங்கேற்றார். இடையில் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே வெளியே சென்றுவிட்டு மீண்டும் அவைக்கு வந்துவிட்டார். அவை நிகழ்ச்சிகள் 2.20 மணியளவில் நிறைவடைந்தன. அந்த வகையில் 5 மணி நேரம் முதல்-அமைச்சர் அமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவனைத்தான் தாயுமானார் 'பேசாத பெரிய மோனம்' என்றார். விஜய் மனிதராயிற்றே ஒரு சொல் எடுத்து இயம்பிக் காட்டக் கூடாதா? ●

# 'நீட்' தேர்வு இனியும் தேவையா?

## ஒன்றிய அரசுக்கு 'தினகரன்' நாளேடு கேள்வி!

சென்னை, ஜூன். 22-

இந்தியாவில் பல மாணவர்களை நீட் தேர்வு பலி வாங்கிக் கொண்டு இருக்கின்ற நீட் தேர்வு ஒன்றிய அரசுக்கு இனியும் தேவையா? என்று மோடி தலைமையிலான ஒன்றிய அரசுக்கு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

அது வருமாறு:-



தினகரன்
இனியும் தேவையா?

இந்தியா முழுவதும் நடைபெற்று வரும் 50க்கும் மேற்பட்ட மருத்துவ படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகளை ஒழுங்குபடுத்தும் வகையில், இந்திய மருத்துவ கவுன்சில் கடந்த 2012ம் ஆண்டு நீட் தேர்வை அறிவித்தது. இதையடுத்து 2013ம் ஆண்டு மே 5ம் தேதி நீட் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வு குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்தது. மேலும் நீட் தேர்வுக்கு எதிராக 115 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம், அதேஆண்டில் (2013) ஜூலை 18ம் தேதி, நீட் தேர்வுக்கு தடை விதித்தது. ஆனால் இது தொடர்பாக மேல்முறையீடு செய்யப்பட்டது. 2016ம் ஆண்டு ஏப்ரல் 11ம் தேதி இதுகுறித்து தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம், நீட் தேர்வுக்கான தடையை விலக்கியது. அதை தொடர்ந்து நிரந்தரமாக நீட் தேர்வு நடத்துவதற்கான சட்டம், 2016ம் ஆண்டு ஜூலை 19ம் தேதி நிறைவேற்றப்பட்டது.

இந்த அவசர சட்டத்தின் அடிப்படையில், நீட் தேர்வில் விருப்பமில்லை என்று சொல்லும் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள், தங்களின் விருப்ப முறையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களை நிரப்பிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் நீட் தேர்விற்கு நிரந்தரமாக விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. பெருநகர பள்ளிகளிலும், குக்கிராம பள்ளிகளிலும் படிக்கும் மாணவர்கள், ஒரே நேர்கோட்டில் இந்த தேர்வை எதிர்கொள்ள முடியாது. கிராமப்புற மாணவர்கள், பள்ளிப்படிப்பை தொடர்வதிலேயே பல்வேறு சிரமங்கள் உள்ளது.

இவர்கள், நீட் போன்ற பிரத்யேக பயிற்சி வகுப்புகளில் லட்சக்கணக்கில் கட்டணம் செலுத்தி படிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே கடந்த காலங்களை போல, பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் கவுன்சலிங் மூலம் மருத்துவம் படிக்க மாணவர்களை தேர்வு செய்ய வேண்டும் என்பது தமிழகத்தின் பிரதான கோரிக்கையாக இருந்து வருகிறது. இத்தகைய சூழலில் தமிழகத்தில் 2017ம் ஆண்டு முதல் நீட் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இது ஒருபுறமிருக்க டாக்டர் கனவுடன் பள்ளிகளுக்கு சென்ற பல்வேறு மாணவ, மாணவிகள் நீட் தேர்வை எதிர்கொள்ள முடியாமல் தற்கொலை செய்த துயரங்களும் மாநிலத்தை அதிர வைத்தது. 2017ம் ஆண்டில் அரியலூர் மாணவி அனிதா நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதிமன்றம் வரை சென்று போராடினார். தனது மருத்துவர் கனவு தகர்ந்த நிலையில், அவர் தற்கொலை செய்தது துயரத்தின் உச்சமானது. 2017ம் ஆண்டு தொடங்கி கடந்த 10 ஆண்டுகளில் தேசிய அளவில் 200க்கும் மேற்பட்டோரும், தமிழகத்தில் 40க்கும் மேற்பட்டவர்களும் நீட் தேர்வு அச்சத்தால் தங்களது இன்னுயிரை மாய்த்துள்ளனர்.

இப்படி மாணவர்களின் உயிர் பறிக்கும் அரக்கனாக மாறி நிற்கிறது நீட் தேர்வு. ஆனால் அது நேர்மையாக நடத்தப்படுகிறதா? என்றால் அதற்கான விடையும் கேள்விக்குறி தான். பல்வேறு காலங்களில் இது நிருபணமாகியுள்ளது. கடந்த மே 3ம் தேதி நடந்த நீட் தேர்வுகுளறுபடிகளும், அதை தொடர்ந்து வெளியான அதிர்ச்சியூட்டும் தகவல்களும் இதற்கான சமீபத்திய ஆதாரங்கள். இதனால் ரத்து செய்யப்பட்ட நீட் மறுதேர்வு நாடு முழுவதும் இன்று (21ம் தேதி) நடக்கிறது. அதேநேரத்தில் தொடர்ச்சியாக இதில் வெற்றியை தக்க வைக்க போராடிய கோவை அனுகீர்த்தனா, சேலம் கோபிகா உள்பட 12 மாணவச்செல்வங்களின் உயிர், இப்போதும் நீட் பதற்றத்திற்கு பலியாகி இருப்பது பரிதாபத்திற்குரியது. இதனால் நீட் தேர்வு இனியும் தேவையா? என்ற பெரும் கேள்வி, தமிழ்நிலத்தில் மட்டுமல்ல, தேசத்தின் பெரும்பான்மை பகுதிகளிலும் எழுந்துள்ளது என்பதே நிதர்சனம். இதை ஒன்றிய அரசு உணர்ந்து கொள்ள வேண்டியது காலத்தின் அவசியம்.

இவ்வாறு தினகரன் நாளேடு ஒன்றிய மோடி அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளது.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வளவனூர் மா.ராஜரத்தினம் (எ) மணி அவரது படத்திறப்பு விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் கலந்துகொண்டு படத்தைத் திறந்து வைத்து புகழ் அஞ்சலி செலுத்தினார். விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

## அரசியல் காழ்ப்புணர்ச்சியால் போக்குவரத்து ஊழியர்கள் டிரான்ஸ்பர்!

# அரசு அதிகாரியை மிரட்டிய செங்கோட்டையன் உதவியாளர்!

ஈரோடு,ஜூன்.22-

ஈரோடு மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில், அ.தி.மு.க. ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் ஏ.கே.செல்வராஜ் அளித்த பேட்டி:

ஈரோடு மாவட்டம் கோபி, நம்பியூர், சத்தியமங்கலம் ஆகிய அரசு போக்குவரத்து கழக கிளைகளில் பணியாற்றும் ஊழியர்கள் சமீபத்தில் நடந்த சட்டமன்ற தேர்தலில் அதிமுக வேட்பாளர் பிரபுக்கு ஆதரவாக, அமைச்சர் செங்கோட்டையனுக்கு எதிராக பணியாற்றினார்கள் என்பதால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஈரோடு மண்டலத்தில் இருந்து கோவை மண்டலம், திருப்பூர் மண்டலங்களுக்கு 9 பேரை மாற்றியுள்ளனர். இதனை கண்டித்து அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த, கோபி போலீஸ் ஸ்டேஷனில் அனுமதி கேட்டால் மறுத்து விட்டனர். தற்போது ஈரோடு எஸ்பி.யிடம் மனு அளித்துள்ளோம்.

அமைச்சர் செங்கோட்டையன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மேலாளரிடத்தில் தொலைபேசியில் கோபி கிளையில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு மாறுதல் உத்தரவு வழங்க வேண்டும் என்றும், இதற்கான பட்டியலை எனது உதவியாளர் சபேசன் தருவார். அந்த பட்டியலை பரிசீலித்து உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் உதவியாளராக இருக்கிற சபேசன், அனைத்து அரசு விஷயங்களிலும் தலையிட்டு வருகிறார். ஏற்கனவே அமைச்சர் செங்கோட்டையனிடம் உதவியாளராக இருந்தவர், என்னென்ன விளைவுகளை சந்தித்தார் என்பது அனைவருக்கும் தெரியும். இந்த முறை உதவியாளராக இருக்கிற சபேசன், ஏற்கனவே இருந்த உதவியாளரை விட வேகமாக அனைத்து விஷயத்திலும் தலையிடுகிறார். வருவாய் துறையில் ஒரு வட்டாட்சியரை மிரட்டியதோடு சஸ்பெண்ட் செய்ய வைத்துள்ளார். அமைச்சரை காட்டிலும், அதிகார துஷ்பிரயோகம் செய்பவராக அவரது உதவியாளர் சபேசன் இருக்கிறார். இது கண்டிக்கத்தக்கது. முதல்வர் வெளிப்படையான அரசாங்கம், ஊழல் இல்லாத அரசாங்கம், கட்சிக்காரர்கள் தலையீடும் இல்லாத ஒரு நிர்வாகத்தை தருகிறேன் என்கிறார்.

ஆனால், ஈரோடு மாவட்டத்தில் ஒரு அமைச்சரின் உதவியாளர் சபேஷனின் ஆதிக்கத்தை கூட கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது.

இவ்வாறு ஏ.கே.செல்வராஜ் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. நாராயணன்

### ஜூன் 22 (2014)



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலும், பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள் இருந்தபோதும், கழக கொள்கைகளை தனது திரைப்படங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.**

**1989ஆம் ஆண்டு காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தனது வாழ்நாளின் ஆரம்பம் முதல் இறுதி வரை கழகத்தின்பால் முழுஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

# ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை - பல்கலைக்கழகங்களின் அதிகாரப் பறிப்பு!

# கழகத் தலைவரின் அறிவுறுத்தலில் - மாணவர் அணி சார்பில் ஆளுநர் மாளிகை முன்பு நாளை கண்டன ஆர்ப்பாட்டம்!